## பனை அபிவிருத்திச் சபை - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, பனை அபிவிருத்திச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரச துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 10,328,337 பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் பொருத்திகளின் கிரயம் ஏனைய கட்டிடங்கள் / காணியின் பொருந்திகளின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது. எனினும், காணியின் மற்றும் கட்டிடங்களின் உரித்துடைமை சபைக்கு சொந்தமானதாக இல்லாத போதிலும் மீளாய்வாண்டில் திரண்ட பெறுமானத் தேய்விற்காக ரூபா 5,528,147 ஆன ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) காரைநகரிலுள்ள கைத்தொழிற் பேட்டையின் ரூபா 3,367,515 கிரயத்திலான கட்டிடம் மற்றும் ரூபா 1,131,225 கிரயத்திலான நெடுந்தீவு தும்புத் தொழில் நிலையம் என்பன கட்டிடக் கணக்கிற்கு மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் முறையே ரூபா 1,951,376 மற்றும் ரூபா 339,366 ஆன திரண்ட பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், இந்தக் காணிகளின் உரித்துடைமை சபைக்கு சொந்தமானதாக இருக்கவில்லை.

(இ) ரூபா 48,107,122 கிரயத்திலான நடைமுறையல்லா சொத்துக்கள் ஏனைய நிதிசார் சொத்துக்களாக தவறாக வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்கு 20 சதவிதத்தில் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 20,395,447 கிரயத்திலான பனை விதை நடுகைக் கிரயம் ஏனைய நிதிசார் சொத்துக்களாக மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் பொருத்தமான கணக்கீட்டு செயன்முறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

சபை அங்கத்தவர்கள் செலவினம், மேலதி நேரக் கொடுப்பனவுகள், பிரயாணச் செலவுகள் சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் பெறுமானத் தேய்வு போன்ற அத்தகைய உப பதிவேடு மீதிகளிற்கும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதிகளிற்கிமிடையில் ரூபா 23,145,291 தொகையான கருத்தில் கொள்ளக் கூடிய வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

### 1.2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்று ஆண்டுகளிற்கு மேலாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டவாறான ஒரு பதவியினரிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 119,320 ஆன முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொழும்பு அலுவலகக் கட்டிடத்தின் ஒரு பகுதி சமூக சேவைகள் அமைச்சிற்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் ரூபா 1220.000 தொகையான வாடகை நிலுவை சம்பந்தப்பட்ட தரப்பிமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை எனினும் இந்த தொகை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிடமிருந்து முறையான அங்கீகாரம் பெறப்படாது 2011 ஆம் ஆண்டில் பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் 2012 யூலை 9 இல் பொது முயற்சிகளுக்கான கணக்கு குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டலின் படி 2013 யூலை 31 வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டில் சபையின் அங்கீகாரத்துடன் மாத்திரம் கிடைக்கவேண்டியவைகளிலிருந்து செலுத்தப்படவேண்டியவைகளை கழித்த பின்னர் முன்னைய ஆண்டின் சீராக்கல்களாக ரூபா 2,464,642 ஆன தேறிய

தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது. இது சமந்தமாக பொதுமுயற்சிகள் குழு கிடைக்கவேண்டியவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் படி அறிவுறுத்திய போதிலும் சபையானது மீளாய்வாண்டில் சரியான தொகையை நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவருவதற்கு அவற்றை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) சபையானது இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ரூபா 26,308 தொகையான ஐந்து கடன்கொடுத்தோரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) ரூபா 1615,344 மொத்தத் தொகையான 1991 தொடக்கம் 2010 வரையான காலப்பகுதிக்கான கணக்காய்வு கட்டண பட்டியல்கள் கிடைத்திருந்த போதிலும் ஒன்பது ஆண்டு காலத்திற்காகச் செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்களை தீர்ப்தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்குகளிலுள்ள ரூபா 59,448,010 கூட்டுமொத்தத் தொகையான பதின் மூன்று விடயங்களை உரித்துறுதிகள் நிலையான சொத்துப் பதிவேடு, கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள், நாளாந்த ஓட்ட அட்டவனைகள், சம்பவக் குறிப்புப் புத்தகங்கள், உடன்படிக்கைகள் முதலியன கிடைக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள். பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள். மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) அதிகாரச் சட்டங்கள்**

(i) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் பிரிவுகள் 12 மற்றும் 14(3)

(ii) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பளவு அதிகாரச் சட்டத்தின் பகுதி II இன் பிரிவு 6 (2) (6)

(iii) 1979 இன் 01 ஆம் இலக்க பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரச் சட்டம்

**(ஆ) நிதிப்பிரமாணங்கள்**

இலக்கங்கள் 110, 135, 272(3), 350, 371 (2) (பீ), 382, 383, 445, 446, 715, 751(1), 756(3), 756(5), 757(1) (சீ), 757(2) (ஏ), 757(2) (சீ), 850 (1), 1010(பீ) 1644, 1646 மற்றும் 1654 (பீ)

**(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை**

(i) அத்தியாயம் VIII இன் பிரிவு 03

(ii) அத்தியாயம் XII இன் பிரிவு 05

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்)**

இலக்கங்கள் 01 மற்றும் 02.

**(உ) கொள்வனவு வழிகாட்டல்கள் - 2006**

(i) அத்தியாயம் 05 இன் பிரிவு 5.3.5

(ii) அத்தியாயம் 02 இன் பிரிவு 2.6.1

**(ஊ) சுற்று நிரூபங்கள்**

(i) 2008 ஓகத்து 15 இன் 51 ஆம் இலக்கம் மற்றும் 2011 செப்தெம்பர் 15 இன் 58(2) ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிரூபங்கள்

(ii) நிதி, திட்டமிடல் அமைச்சின் 1996 ஏப்ரல் 20 ஆம் திகதிய எம்பீ/6/1/96 ஆம் இலக்க சுற்று நிரூபத்தின் பந்தி 2.4.1

**(எ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க நல்ல ஆளுகைக்கான பொது முயற்சி வழிகாட்டல்கள் சுற்று நிரூபம்**

(i) பந்திகள் 4.2.2 மற்றும் 4.2.5

### 1.2.6 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவினத்திற்காக ரூபா 24,048,000 தொகை கிடைத்திருந்த போதிலும் இந்த ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 157,389 தொகை முறையான அதிகாரமின்றி மீண்டுவரும் செலவினத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 1.2.7 ஒழுங்கற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் எல்லைகளை மிகைத்து ரூபா 619,607 ஆன எரிபொருட் செலவினம் சபையின் தலைவருக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருருந்தது.

(ஆ) பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் அதன் 3 ஆவது கூட்டத்திலிருந்து 12 ஆவது கூட்டம் வரை சபையின் செயலாளராக பதிற் கடமை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் மேற்படி 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.8 ஆம் பந்திக்கு முரணாக செயலாளருக்கான படியாக சபையின் 10 கூட்டங்களிற்கு வருகை தந்தற்காக 2012 திசெம்பர் 08 இல் ரூபா 20,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2008 ஓகத்து 15 ஆம் திகதிய பீஈடி/51 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்திற்கு முரணாக மீளாய்வாண்டிற்காக சபையின் மூன்று அவதானிப்பாளர்களிற்கு ரூபா 107,750 ஆன படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாடுகள் விளைவித்திருந்த மீண்டுவரும் செலவிற்கான ரூபா 55,664,000 அரசாங்க மானியத்தை கணக்குகளிற்கு எடுத்த பின்னரான ரூபா 9,763,832 ஆன தேறிய நட்டத்தை முன்னைய ஆண்டிற்கான ரூபா 55,664,000 அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுத்த பின்னர் அந்த ஆண்டிற்கான ரூபா 3,145,965 ஆன நேரொத்த தேறிய நட்டத்துடன் ஒப்பிடலாம்.

அது பனை அபிவிருத்திச் சபையின் செயற்பாட்டு நிதிசார் விளைவுகளில் ரூபா 6,617,867 ஆன மேலும் ஒரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதசார் மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவினம் ரூபா 96,920,918 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 48,669,700 ஆளுக்குரிய வேதனங்களிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இது மொத்த செலவினத்தில் 50 சதவீதத்திற்கான ஐ பிரதிநிதித்துவப்படதுதியது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கீழே கொடுக்கப்பட்ட விபரங்களின்படி, ஐந்து மாதிரிப் பண்ணைகள் மீளாய்வாண்டிற்காக ரூபா 4,063,163 ஆன மொத்த நட்டங்களில் செயற்படுத்தப்பட்டிருந்தமையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 3,084,332 உடன் ஒப்பிடலாம்.

| பண்ணையின் பெயர் | மொத்த வருமானம் ரூபா | மொத்த கிரயம் ரூபா | தேறிய நட்டம் ரூபா |
|---|---|---|---|
| குடத்தனை | இல்லை | 475,675 | 475,675 |
| மாமுனை | இல்லை | 759,630 | 755,880 |
| நெடுந்தீவு | இல்லை | 61,180 | 61,180 |
| புளியங்குளம் | இல்லை | 808,704 | 808,704 |
| வீரவில | 112,505 | 2,066,934 | 1,961,724 |
| | | | 4,063,163 |

(ஆ) வீரவில மாதிரிப் பண்ணையில் போதிய ஊழியர்கள் பனிக்கமர்த்தப்பட்டிருந்ததுடன் மொத்தக் கிரயத்தில் 93 சதவீதமான ஆன மொத்த சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில்

பண்ணையின் தொழிற்பாடு அதன் ரூபா 112,505 வருமானத்திற்கெதிராக ரூபா 1,961,724 ஆன பாரிய தேறிய நட்டத்தை ஏற்படுத்தியிருந்தது.

(இ) 567 ஏக்கர்கள் பரப்பளவுள்ள பின்வரும் ஏழு மாதிரிப் பண்ணைகள் முற்றாக பயன்பாடின்றி இருக்கவிடப்பட்டிருந்தன. விபரங்கள் பின்வருமாறாகும்.

| **பண்ணையின் அமைவிடம்** | **காணியின் பரப்பு (ஏக்கர்)** |
|---|---|
| மாமுனை | 436 |
| சிங்கை நகர் | 50 |
| ஊற்றுப்புலம் | 50 |
| கௌதாரிமுனை | 10 |
| அறிவியலே நகர் | 07 |
| முழங்காவில் | 02 |
| நறவிலிக் குளம் | 12 |
| மொத்தம் | 567 |

## 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீரவில மாதிரிக் பண்ணையில் உற்பத்தியாக்கப்பட்ட கைவினைப் பொருட்களின் உற்பத்திகளிற்கு திஸ்ஸமகராமாவில் பாரிய கேள்வி இருந்த போதிலும் திஸ்ஸமகாராம நிலையம் அதேவிதமான பொருட்களை கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் உயர்ந்த போக்குவரத்துக் கிரயத்துடன் கொள்வனவு செய்திருந்தது.

(ஆ) திஸ்ஸமகாராமாவில் பனை ஓலைக் கைப்பணிப் பொருட்களிற்கு பாரிய கேள்வி இருந்த போதிலும் மேலதிக கேள்வியை ஈடுசெய்யும் நோக்கில் அந்தப் பொருட்களை வழங்குவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) கொள்வனவு செய்யப்பட்ட 11,477 பனம் விதைகளில் 6,085 எண்ணிக்கையான விதைகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் 18 கிராம சேவகர் பிரிவுகளிற்கு 2012

ஒக்தோபர் தொடக்கம் திசெம்பர் வரையில் விநியோகிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விதைகளின் விநியோகத்திலான முன்னேற்ற மீளாய்வு அறிக்கை கணக்காய்விற்கு தரப்பட்டிருக்கவில்லை.

(ii) பளம் விதைகளின் இரும்பு மீதியான 5,392 இன் நடுகையின் நிலைமை மற்றும் முன்னேற்றம் என்பவற்றின் முன்னேற்ற மீளாய்வு அறிக்கை இன்மையால் அதனை கணக்காய்வில் நியாயப்படுத்தமுடியவில்லை.

(ஈ) கிரயத்தை தாக்கமான முறையில் மேற்கொள்வதற்காக பயனுறுதிமிக்க விநியோக வழியை சபை வரையறுத்திருக்காததுடன் 6,085 பெறுமதியான பனம் விதைகளை விநியோகிப்பதற்கு ரூபா 38,118 ஐ சபை செலவழித்திருந்தது.

(உ) பனை அபிவிருத்தி சபையின் ஒருங்கிணைப்பாளர்கள் பல்வேறு சூழ்நிலைகளில் வித்தியாசமான விலைகளில் ரூபா 199,887 பெறுமதியான 101,477 எண்ணிக்கையான பனம் விதைகளைக் கொள்வனவு செயவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

மீளாய்வாண்டில் சபையின் மூன்ற நிலையங்களில் ரூபா 1,868,644 பெறுமதியான மெதுவாக நகரும், பயன்பாடற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள் அவதானிக்கப்பட்டன.

## 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) நில அளவைத் திணைக்களத்தைக் கேட்டுக்கொள்ளாமலும் சபையின் அங்கீகாரமின்றியும் 2012 திசெம்பர் 08 இல் கிளிநொச்சி, பிராந்திய அலுவலகத்தின் காணியை நில அளவை செய்வதற்கு ஒரு அனுமதிப் பத்திர நில அளவையாளர் மற்றும் ஒரு மட்டமிடுவோரிற்கு ரூபா 21,600 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 57,000 எண்ணிக்கையான பனம் விதைகள் தொடர்பாக ஒருசீரின்றி ஏற்றியிறக்கல் கட்டணங்கள் விதை மற்றும் நாற்று மேடைக் கட்டணங்கள் என்பவற்றிக்காக ரூபா 25,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

குத்தகைச் சொத்துக்களின் விபரங்கள் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்காததுடன் வரையறுக்கப்பட்ட வடமராட்சி பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க கொத்தனி செய்து கொள்ளப்பட்ட குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் ஐந்தான்டுகளிற்கு மேலாக சபையால் திக்கம் வடிசாலை செயற்திட்டம் தொடர்பான செலுத்தப்பட வேண்டியவைகள் மற்றும் கிடைக்க வேண்டியவைகள் நிதிக் கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும், உரித்தாணமை மற்றும் குத்தகை வாடகைகள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை, செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி, திக்கம் வடிசாலைச் செயற்திட்டத்தை மீளப் பெறுதலுடன் இணங்கத் தவறியமை மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் தரப்படாமை என்பன இது தொடர்பிலாகும்.

**3.6 செயற்திட்டத்தில் தாமதம்**

காரை நகரில் கைத்தொழில் தொகுதிக்கான கட்டிடத்தை நிருமாணிப்பதற்காக 2003,2004 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 3,055,834 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. வேலைகள் 2003 நொவம்பர் 07 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டுமன்று உடன்பட்ட போதிலும் வேலைகள் 2013 மே 31 வரையிலும் கூட பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.7 மனித வள முகாமைத்துவம்**

மீளாய்வாண்டிற்கான ஆளணி விபரங்கள் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்த வெற்றிடங்கள் என்பன கீழெ தரப்படுகின்றன.

| மட்டம் / தரம் | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை | இருக்கின்ற ஆளணி எண்ணிக்கை | வெற்றிடங்கள் / (மேலதிக) எண்ணிக்கை |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 02 | 01 | 01 |
| மூன்றாவது மட்டம் | 22 | 14 | 08 |
| இரண்டாவது நிலை மட்டம் | 89 | 63 | 26 |
| ஆரம்ப மட்டம் | 111 | 72 | 39 |
| | 224 | 150 | 74 |

**3.8 வாகனங்களின் பயன்பாடு**

வாகனங்களின் திருத்தங்கள் மற்றும் பராமரிப்பிற்காக ரூபா 758,284 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், நி.பி 1646 இன் பிரகாரம் அவற்றை பதிவு செய்வதற்கு சம்பவக்குறிப்புப் புத்தகங்கள் எதுவும் பேணப்பட்டிருக்கவில்லை.

**3.9 சர்ச்சைக்குரிய விடயங்கள்**

பம்பலப்பிட்டியிலுள்ள அலுவலகக் கட்டிடத்தின் 3 ஆவது மாடிக்கான வாடகையாக 2012 ஆம் ஆண்டிற்கு ரூபா 4,980,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் இது கடந்த நான்கு ஆண்டுகளாக சபையின் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிதகைமை மற்றும் நல்ல ஆளுகை**

**4.1 கூட்டுத்திட்டம்**

2012 ஆம் ஆண்டிற்காக ஒரு கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், நடவடிக்கைத்திட்டத்தில் காட்டப்பட்ட இலக்குகளின் முன்னேற்றம் பருவகால ரீதியாக மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.2 ஆண்டு நடவடிக்கைத் திட்டம்**

2012 ஆம் ஆண்டிற்காக நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்ட இலக்குகளின் முன்னேற்றம் பருவ காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒரு உள்ளகக் கணக்காய்வாளருடன் மாத்திரம் நிறுவப்பட்டிருந்தது. எனினும், பிரிவின் பயனறுதி மிக்க செயற்பாட்டிற்காக ஏனைய பதவியினர் எவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

சபையானது ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை நிறுவியிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டில் மூன்று கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. எனினும், 2005 யூலை 01 ஆம் திகதிய பீஈடி / 31 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிரூபத்தின்படி, ஒரு ஆண்டில் குறைந்தது நான்கு கூட்டங்கள் நடைபெற்றிருக்க வேண்டும்.

## 4.5 ஆண்டறிக்கை அட்டவணைப்படுத்தல்

நிதி அதிகாரச் சட்டத்தின் 14(3) பிரிவின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2013 மே 31 வரை பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கையின் மூலம் சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

- (அ) கணக்கீடு
- (ஆ) கிடைக்க வேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள்
- (இ) நிதிகளின் பயன்பாடு
- (ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
- (உ) மனித வள முகாமைத்துவம்
- (ஊ) வாகனப் பாவனை
- (எ) பாதீடு